நிறுத்தி விடுவார்கள் என்று கருதுகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் சட்டம், ஒழுங்குப்பிரச்னை வந்தால், அதை எப்படிப் பாதுகாக்க வேண்டுமோ அப்படிப் பாதுகாக்க நம் அலுவலர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று அரசாங்கத்தின் சார்பில் உறுதி கூறிக்கொள்கிறேன். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது "ஐயையோ, நடவடிக்கை எடுக்கிறார்களே" என்று இந்தப் பிரச்னையை பேசுபவர்கள் அதையும் பேசாமல் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்றும் அரசாங்கம் நம்புகிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த அளவில், இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்ற என் கருத்தை அரசாங்கத்தின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : In view of the statement made by the Hon. the Minister for Industries and since the matter sought to be discussed involves nothing more than the ordinary administration of law, I withhold my consent for raising the matter.

6. துணைத் தலைவர்கள் குழுப் பட்டியல்

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: இந்திய அரசியலமைப்பின்படி, சட்ட மன்ற மேலவையின் நாற்பத்திரண்டாவது கூட்டத் தொடருக்கான மேலவைத் துணைத் தலைவர்கள் பட்டியலின் உறுப்பினர்களாக கீழ்க்காணும் சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் நான் நியமித்துள்ளேன் என அறிவிக்கிறேன் :---

1. திரு. ஏ. பி. ஜனார்த்தனம்.

2. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு.

3. திரு. ஜி. சுவாமிநாதன்.

4. திரு. எம். ஆறுமுகசாமி.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) ஆகஸ்டு 14-ம் தேதி நடுநிசிக் கூட்டம் குறித்து.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இடையில் 14-ம் தேதி அன்று இரு சபை உறுப்பினர்களுடைய கூட்டுக் கூட்டம் நடைபெறும் என்று பத்திரிகையில் படித்தோம். அதுபற்றி இதுவரை உறுப்பினர்களுக்கு அறிவிக்க